DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 187/2018

Prosecution witness for P.W.13

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திரு.மும்மூர்த்தி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.11.2025.**

முதல்விசாரணை:-

நான் 28.02.2025 ஆம் தேதி அரசு வேலையிலிருந்து ஓய்வுபெற்று முத்தையாபுரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 06.01.2017 அன்று நான் தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வந்தபோது தூத்துக்குடி தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் நிலைய காவலர் திரு.செல்வகுமார் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பிய பிரேத விசாரணை வேண்டுகோள் கடிதத்தை பெற்று தாளமுத்துநகர் காவல்நிலைய குற்ற எண். 2/2017 வழக்கில் இறந்த ஆண் பிரேதம் சங்கர்ராஜா என்ற பிரேத உடலை காவலர் அடையாளம் காட்டி என்னிடம் ஒப்படைத்தார். அதன்படி பிரேத பரிசோதனையை 06.01.2017 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். மேற்படி பிரேதமானது திடபோசாக்குடனும், மற்றும் கால், கை விரல்கள் வெளிறியும் காணப்பட்டன. மற்றும் மூக்கு, காதுகள் இரண்டிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது. மற்றும் பிரேதத்தில் கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

காயம் எண். 1– இடது பக்க கால் முட்டியில் 1 செ.மீ x 1 செ.மீ அளவிற்கு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

தலைபகுதியை பரிசோதனை செய்தபோது இடது பக்க தலையின் 18 செ.மீ x 10 செ.மீ அளவில் இரத்தக்கட்டு காணப்பட்டது. அதனை தலைத்தோலை கிழித்து உடற்கூறாய்வு செய்ததில் அதன் அடியில் 18 செ.மீ நீளத்திற்கு எலும்பு முறிவுடன் தலை காணப்பட்டது. கபால எலும்பை பிரித்து பார்க்கும்போது மூளைக்கு அருகே 50 கிராம் அளவுள்ள இரத்தம் உறைந்து காணப்பட்டது. மற்றும் மூளையில் இரத்தகசிவும் இருந்தது.

வயிற்றுப்பகுதியை கிழித்து பார்த்ததில் இயல்பாக காணப்பட்டது. இதயத்தை சுற்றியுள்ள பகுதியில் 10 மில்லி திரவம் காணப்பட்டது. இருதயம் இயல்பாக காணப்பட்டது. இருதயமும் அதன் அறைகளும் இயல்பாக காணப்பட்டது. அதன் இருதய நாளங்கள் இயல்பாக இருந்தது. நுரையீரல் மற்றும் நுரையீரல் குழாய்கள் இயல்பாக இருந்தது. மற்றும் நாவடி எலும்பு இயல்பாக காணப்பட்டது. சுற்றியுள்ள தசைகள் இரத்தகசிவுடன் காணப்பட்டது. மற்றும் சுற்றியுள்ள எலும்புகள் இயல்பாக இருந்தது. மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகங்கள் இயல்பாக இருந்தது. அதன் வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. வயிற்று பகுதியில் 300 மில்லி அளவுள்ள கருப்புநிற சீரனமான உணவு காணப்பட்டது. எந்தவித நெடியும் இல்லாமல் இருந்தது. அதேபோல் சிறுகுடலில் 100 கிராம் அளவுள்ள சீரனமான உணவு காணப்பட்டது. எந்தவித நெடியும் இல்லாமல் இருந்தது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. மூளை இயல்பாகவும், அதன் வெட்டும்தோற்றம் இயல்பாகவும் இருந்தது. பிறப்பு உறுப்புகள் இயல்பாக இருந்தது. இரத்தமாதிரிகள் பகுப்பாய்விற்காக சேகரிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை முடித்து இறந்த நபர் இறப்பதற்கு தலையில் ஏற்பட்ட காயமும், இரத்தக்கசிவும் காரணமாக இருந்தது. அவர் பிரேத பரிசோதனைக்கு முன் 6 லிருந்து 12 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என கருத்து கூறி எனது கருத்துரையை தெரிவித்தேன். இது சம்மந்தமாக நான் வழங்கிய கருத்துரை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 18** ஆகும். மேற்படி காயங்கள் கட்டை, கத்தியால் ஒன்றுக்குமேற்பட்ட நபர்கள் இறந்துபோனவரை தாக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

நான் பிரேத பரிசோதனை செய்யும்போது வெளிப்புற காயங்கள் என்று ஒரு இடது கால் முட்டியில் உள்ள சிராய்ப்பு காயத்தைத்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வெளிப்புற வேறு காயங்கள் எதுவும் பார்த்ததாக கருத்துரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மூக்கு மற்றும் காதுகளிலிருந்து இரத்தம் வந்ததாக சொல்லியுள்ளேன். உள்காயம் இருக்க வாய்ப்புள்ளது. மேற்படி காயங்கள் எல்லாம் ஒரு வாகனம் வேகமாக மோதினாலோ, போதையில் கீழே தடுமாறி விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். பிணவிறைப்பு தன்மை ஒரு நபர் இறந்தவுடன் 2 மணிநேரத்தில் ஆரம்பமாகும் என்றால் சரிதான். 6 மணிநேரம் என்றால் ஓரளவு விறைப்பு தன்மை ஏற்பட்டுவிடும் என்றால் சரிதான். அ.சா.ஆ–18 ல் பிணவிறைப்பு தன்மை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். உடல்முழுவதும் பிணவிறைப்பு தன்மையுடனும், கால்கள் விறைப்பு தன்மை இல்லாமலும் உள்ளதாக சொல்லியுள்ளேன். முழுவதுமாக பிணவிறைப்பு தன்மை ஏற்படும் என்றால் 6 முதல் 12 மணி நேரம் ஆகும். கால் வரைக்கும் பிணவிறைப்பு தன்மை வர குறைந்தது 10 மணிநேரம் ஆகும் என்றும்,

நான் சரிவர பரிசோதனை செய்யாமல் மருத்துவரிதிக்க புறம்பாக கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆய்வாளர் வழக்கின் சரித்திரத்தை கொடுத்ததால் அதன் அடிப்படையில் சான்றிதழ் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு நபரை கட்டை, கம்பியை கொண்டு அடித்தால் வெளிப்புற காயங்கள் ஏற்படும் என்றால் ஏற்படாமலும் இருக்கலாம். இந்த வழக்கில் ஆயுதங்கள் காட்டி ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. என்னை ஆய்வாளர் விசாரணையே செய்யவில்லை என்றாலும், அதனால்தான் ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 187/2018

Prosecution witness for P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. அப்பாதுரை** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.11.2025.**

<u>முதல்விசாரணை:-</u>

நான் கடந்த 15 வருடங்களாக தூத்துக்குடி முள்ளக்காடு 7/87C என்ற சாமிநகரில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சு ஆசாரி வேலை செய்து வருகிறேன். சாட்சி மாரிமுத்துவை எனக்கு தெரியும். அவர் எனக்கு மைத்துனர். ஆஜர் எதிரி ஜெமினி என்ற சுரேஷ் மற்றும் முனிஸ்வரன் என்ற நன்டால் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜாவை தெரியும். அவர் எனது மைத்துனர். சங்கர்ராஜா கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. என்னிடம் தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் வைத்து 2,3 கையெழுத்துக்கள் வாங்கினார்கள். அந்த கையெழுத்தை ஏன் எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்றால் என் மைத்துனர் கொலை வழக்கு சம்மந்தமாக போட்டுக்கொடுத்தேன். எங்கள் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை, ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவும் இல்லை. நீதிமன்றத்தில் காட்டப்படும் எதிரி ஜெமினி என்ற சுரேஷ் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 19** ஆகும். நீதிமன்றத்தில் காட்டப்படும் பொருட்களை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 20** ஆகும். மேற்படி 2 கையெழுத்துக்களையும் காவல்நிலையத்தில் சங்கர்ராஜா அடிபட்டு கிடந்தது சம்மந்தமாக தாளமுத்துநகர் போலீசார் என்னிடம் வாங்கினார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள், அப்பொழுதும் மேற்படி விவரத்தைதான் சொல்லியுள்ளேன். எங்கள் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, கடந்த 07.01.2017 ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணியவில் நானும், எனது மைத்துனர் மாரிமுத்து என்பவரும் ராஜபாளையம் கடற்கரையில் இருக்கும்போது தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய வழக்கு சம்மந்தமாக இவ்வழக்கின் எதிரி ஜெமினி என்ற சுரேஷ் என்பவரை கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரிக்க மேற்படி எதிரி ஜெமினி என்ற சுரேஷ் எவ்வித தூன்புறுத்தலோ, ஆசைவார்த்தையுமின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனை ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்தான் நானும், மாரிமுத்துவும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி ஜெமினி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை அடையாளம் காட்டி ஆஜர் செய்வதாகவும், அதை எங்கள் முன்னிலையில் அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சியில்தான் நானும், மாரிமுத்துவும் கையெழுத்து செய்துகொடுத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)